DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.96/2025**
Prosecution Witness P.W.10

Name : **திருமதி.மகேஸ்வரி** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 20.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**முதல் விசாரணை**

1. நான் தற்போது விருதுநகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.11.2019 –ம் தேதியன்று காலை 10:30 மணிக்கு நான் போடி நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்து பணியில் இருந்தபோது போடி டி.வி கே.கே நகர், நாகம்மாள் கோவில் தெருவை சேர்ந்த அபுதாஹீர் மகன் ஜெய்லானி, 35 வயது மதிக்கத்தக்கவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரை பெற்று பார்வையிட்டு புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப போடி நகர் காவல் நிலைய குற்ற எண் 959/2019 சட்டப்பிரிவு 174 Cr.PC படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் போடி அவர்களுக்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

2. பின்னர் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக போடி நகர் காவல் ஆய்வாளர் திரு. ஷாஜகான் அவர்களது பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக போடி நகர காவல் ஆய்வாளர் திரு. ஷாஜகான் அவர்கள் கடந்த

20.11.2019−ம் தேதியன்று என்னை விசாரணை செய்தார். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.14 .பின்னர் 04.03.2025−ம் தேதியன்று நான் தேனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது போடி நகர காவல் ஆய்வாளர் திரு.கோபிநாத் அவர்கள் மேற்படி வழக்கின் சட்டப்பிரிவு174 crpc யிலிருந்து 109, 302 IPC − யாக கடந்த 25.02.2025 ஆம் தேதியன்று 18.00 மணிக்கு சட்டப்பிரிவு மாறுதல் செய்துள்ளதாக என்னிடம் கூறி இவ்வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்களை சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. புகார் கொடுக்க காவல்நிலையத்திற்கு யார், யார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் காலை 10.30 மணிக்கு வழக்கின் வாதி ஜெய்லானி மற்றும் அவரது உறவினர்கள் அப்பாஸ் மந்திரி, அப்பாஸ் ஆகியோர்கள் வந்தார்கள். 2ம் எதிரியின் பெயரை புகாரில் குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் சரிதான்.. நான் புகார் வாங்கிய பிறகு சம்பவ இடம் சென்று பார்த்தேனா என்றால் சம்பவயிடம் சென்று பார்க்கவில்லை. முதல் தகவல் அறிக்கை காலம் எண்.14−ல் புகார்தாரரின் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரமும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரானது காலதாமதத்துடன் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கான காரணமும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எனது மேலதிகாரிக்கு அன்றைய தினமே வழக்கு கோப்பை விசாரணைக்கு ஒப்படைத்தேன்.

2. 25.02.2025 ஆம் தேதியன்று சட்ட மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து மீண்டும் என்னை 04.03.2025 தேதியன்று ஆய்வாளர் விசாரணை செய்தார். இந்த புகாரானது மேலதிகாரியின் ஆலோசனையின் பேரில் வழக்குக்காக

உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் புகாரானது கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.20 15:55:06 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.